# குடியரசு தின விழா

அண்ணா பல்கலைக்கழகத்தில் குடியரசு திருநாள் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாண்புமிகு துணைவேந்தர், பேராசிரியர் ரா.வேல்ராஜ் , பதிவாளர் ஜி .ரவிக்குமார் , புல முதல்வர்கள் , பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர். துணைவேந்தர், பேராசிரியர் ரா.வேல்ராஜ் அவர்கள் , தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளுக்கு மரியாதை செலுத்தி விட்டு , மூவர்ணக் கோடியை ஏற்றி வைத்து, விழாப் பேருரையாற்றினார் .

விடுதலை போராட்ட வீரர்களின் தியாகத்தையும் , தீரத்தையும் திறம்பட எடுத்துரைத்து , இன்றைய இளைய தலைமுறையினரிடம் நாட்டு பற்றை ஊக்குவிக்கும் பணியை பேராசிரிய பெருமக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று துணைவேந்தர் வேண்டுகோள் விடுத்தார். இந்தியாவின் எதிர்காலம் கிராமங்களில் இருக்கிறது என்ற மகாத்மா காந்தியடிகள் கூற்றுக்கிணங்க , "ஆஜாதீ கா அம்ரித் மஹோட்சவ்" கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, அண்ணா பல்கலைக்கழகம், கிராமங்களை தத்தெடுக்கும் திட்டத்தை துணைவேந்தர் முன்மொழிந்தார். விவசாயிகளை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பத்தை கிராமங்களில் செயல்படுத்த வேண்டிய முக்கியத்துவத்தை துணைவேந்தர் அவர்கள் எடுத்துரைத்தார்.

ஜனவரி 12ஆம் தேதியன்று, சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம் அண்ணா பல்கலைக்கழகத்தில், 'ஒய். ஆர். சி' அமைப்பின் மூலம், இணையதள வழியில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. சுவாமி விவேகானந்தரைப் பற்றிய பேருரை, சுவாமி விவேகானந்தர் குறித்து வினாடி வினா நிகழ்ச்சி மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. பெரும் திரளான மாணவர்கள், வினாடி வினா நிகழ்ச்சியில் பங்கேற்றனர். வினாடி வினா நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை, துணைவேந்தர் அவர்கள் இன்றைய விழாவில் வழங்கி சிறப்பித்தார்.

இந்த குடியரசு திருநாள் விழாவின் முத்தாய்ப்பாக, நம் விடுதலைப் போராட்ட வீரர்களை சிறப்பிக்கும் முகமாக, தொடர் ஓட்டப் பந்தயத்தை துணைவேந்தர் அவர்கள் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். Click to watch Republic Day Celebration speech by Vice-Chancellor.








ANNA UNIVERSITY




ANNA UNIVERSITY SPORTS BOARD
WELCOMES ALL TO THE
Patriotic Day
Run-2022